**செய்தி வெளியீடு எண்: 337** **நாள்: 19.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (19.5.2018) திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடைபெற்ற கொடைக்கானல் கோடை விழா 2018 மற்றும் 57வது மலர்க் கண்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா

தெய்வத்தை வணங்கி,

கொடைக்கானல் கோடை விழா 57வது மலர்க் கண்காட்சி தொடக்க விழா மற்றும் முடிவுற்ற பணிகள், தொடங்கியுள்ள பணிகளுக்கு திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி தலைமையுரை ஆற்றிய

மாண்புமிகு வனத் துறை அமைச்சர்

**திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துபெற்று, சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

**திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!**

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பித்த

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின்

அரசு முதன்மை செயலாளர்

**திரு. அபூர்வ வர்மா அவர்களே!**

மற்றும் திட்ட விளக்க உரையாற்றிய

வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும்

அரசு முதன்மை செயலாளர்

**திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே!**

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, இங்கே சிறப்பான கருத்துக்களை வழங்கிய

நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு.எம்.உதயகுமார் அவர்களே!**

நாடாளுமன்ற உறுப்பினர், வக்ஃபு வாரியத் தலைவர்

**திரு.அன்வர்ராஜா அவர்களே!**

முன்னாள் அமைச்சர்

திரு.நத்தம் விஸ்வநாதன் **அவர்களே!**

முன்னாள் மேயர், வாரியத் தலைவர்

திரு. மருதுராஜ் **அவர்களே!**

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.நடராஜன் **அவர்களே!**

**மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற**

**திரு.திவான் பாஷா அவர்களே!**

**திரு.பாரதி முருகன் அவர்களே!**

திரு.ஜெயசீலன் அவர்களே**!**

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.நடராஜன் **அவர்களே!**

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.சுப்புரத்தினம் **அவர்களே!**

**திரு.ஏ.பி.செல்லச்சாமி அவர்களே!**

**திரு.பழனிசாமி அவர்களே!**

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.தவசி **அவர்களே!**

முன்னாள் நகர மன்றத் தலைவர்

திரு. ஸ்ரீதர் **அவர்களே!**

திரு. சண்முகசுந்தரம் **அவர்களே!**

திரு. வி.கே.முருகன் **அவர்களே!**

மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே!

உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

பெரியோர்களே! தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
சுற்றுலாப் பயணிகளே!

இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள
திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்
**டாக்டர் டி.ஜி. வினய் அவர்களே!**
அரசு அலுவலர்களே!
உங்கள் அனைவருக்கும் பணிவான
வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,
**"செல்வம் எத்தனையுண்டு புவிமீதே—அவை**
**யாவும் படைத்த தமிழ்நாடு"—** என்ற
மகாகவி பாரதியாரின் பாடலை மெய்ப்பிக்கும் வகையில், தமிழ்நாடு அனைத்துவகை
இயற்கை செல்வங்களையும் ஒருங்கே பெற்று திகழ்கிறது.

இன்றளவும் பழமையும், பண்பாடும்
மாறாமல் இருந்து வருகிறது.
பல மலைகளைக் கொண்ட குறிஞ்சி பகுதிகளையும்,
பல காடுகளைக் கொண்ட முல்லைப் பகுதிகளையும்,
பரந்த பசுமையான வயல்வெளிகளைக் கொண்ட
மருதம் பகுதிகளையும்,
நீண்ட அழகான கடல் பரப்பைக் கொண்ட நெய்தல் பகுதிகளையும் தன்னகத்தே
கொண்டு,
வெளி மாநிலத்தவரையும், வெளிநாட்டினரையும்
அதிகமாக கவர்ந்திழுக்கும்
உலகின் முக்கிய சுற்றுலா மாநிலமாக
தமிழ்நாடு விளங்கி வருகிறது.

குறிப்பாக மலையும் மலையைச் சார்ந்த இடங்களான
ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற
சுற்றுலா தலங்களுக்கு அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

இத்தகைய சுற்றுலா பயணிகள்தான்
தமிழ்நாட்டின் பழமை, கலை, பண்பாடு
ஆகியவற்றின் பெருமைகளை
தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.
தமிழ்நாட்டின் புகழ் உலகம் முழுவதும் சென்றடைவதற்கு இச்சுற்றுலா தலங்களின்
பங்குதான் முதன்மையாக இருக்கிறது.
அதனால்தான், குறிப்பாக ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற சிறந்த சுற்றுலா
மையங்களின் பராமரிப்பிலும் வளர்ச்சியிலும்
தமிழ்நாடு அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. வெளிமாநிலம்,
வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை நமது விருந்தினர்களாக
கருதி அவர்களையெல்லாம் மகிழ்விக்கும் வகையில்தான் ஒவ்வொரு ஆண்டும்

ஊட்டியிலும், ஏற்காட்டிலும், கொடைக்கானலிலும் தமிழ்நாடு அரசு சார்பில் மலர்க்கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள வண்ண பூக்களும், செடிகளும் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

கடந்த வாரம் 12ஆம் தேதி ஏற்காட்டில் மலர்க்காட்சியை தொடங்கி வைத்தேன்.

நேற்று உதகையில் மலர்க் காட்சியை தொடங்கி வைத்தேன்.

அதைத்தொடர்ந்து இன்று கொடைக்கானலில் 57வது மலர்க் கண்காட்சியை நான் தொடங்கி வைக்கின்றேன்.

இந்த 57வது கொடைக்கானல் மலர்க் கண்காட்சியிலே இன்றைக்கு பல்வேறு வகையான பூக்கள் மூலமாக அலங்கரிப்பட்ட வடிவமைப்புகளை பார்க்கின்றோம். 60 வகையான மலர்களைக் கொண்டு 800 ரகங்கள் நடவு செய்யப்பட்டு, தற்போது மலர்கள் பூத்துக் குலுங்கி, பார்வையாளர்களின் கண்ணுக்கு விருந்தளிக்கின்றது. பால்சம், பிரமுலாஸ், பிகோனியா மற்றும் அலங்காரச் செடிகள் 5000 பூந்தொட்டிகளில் கண்ணாடி மாளிகையில் பார்வையாளர்கள் கண்டுகளித்து மகிழ்கின்ற வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. கார்னேஷன், ஜெர்பிரா, ரோஜா மற்றும் கண்ணைக் கவரும் பல வண்ண மலர்களைக் கொண்டு, 2 லட்சம் மலர்களைக் கொண்டு, யானை, ஜல்லிக்கட்டுக் காளை, மாட்டுவண்டி, மயில், தாஜ்மஹால், நடன மங்கைகள் உருவங்கள் என தத்ரூபமாக மலர்களால் உருவாக்கப்பட்ட காட்சி இங்கே வைக்கப்பட்டுள்ளது. இம்மலர் கண்காட்சியின் சிறப்பம்சமாக 17 அடி உயரத்தில் கொடைக்கானலின் சிறப்பான வெள்ளி நீர்வீழ்ச்சி 10,000 கார்னேஷன் மலர்களால் உருவாக்கப்பட்டு, பார்வையாளர்கள் வியக்கும்வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் கண்டுகளிக்கும்வண்ணம் காய்கறிகளைக் கொண்டு 10 அடி நீளம் கொண்ட டிராகன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தார்ப்பூசணி, பூசணிக்காய், கத்தரிக்காய் மற்றும் பலவகையான காய்களைக் கொண்டு, உருவங்கள் தத்ரூபமாக, நாம் மகிழக்கூடிய அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இங்கே பேசிக்கொண்டிருந்தபொழுது, ஏற்கனவே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களும் , மரியாதைக்குரிய முன்னாள் மேயர் திரு.மருதுராஜ் அவர்களும், முன்னாள் அமைச்சர் திரு.நத்தம் விஸ்வநாதன் அவர்களும் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இங்கே, சிறுமலை என்ற பகுதி இருக்கின்றது. அந்த பகுதியிலே சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கக்கூடிய அளவிற்கு, சுற்றுலாத் துறை மூலமாக அதை நவீனப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அது, அரசால் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூன்று இடங்களிலும் மலர்க்கண்காட்சி மிக மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனக்கு மனநிறைவை தருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

கொடைக்கானல் மலை, கோடை காலத்திற்கு ஏற்ற மலை என்பதால், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் தாங்கள் வசிக்கவும், ஓய்வு எடுக்கவும், ஏற்ற இடமாக கருதி இங்கு வந்தார்கள். அதனாலேயே இந்த மலையின் பல பகுதிகள் ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்டே இன்றளவும் அழைக்கப்பட்டு வருகின்றன.

சங்க காலத்திலேயே இந்த மலையை 'கோடை மலை' என்று அழைத்திருக்கிறார்கள். ஆனாலும், வருடம் முழுவதும் மக்கள் வசிக்க ஏற்ற இதமான தட்பவெப்ப நிலை இங்கு நிலவுகிறது. எனவே தான், கோடை காலத்தில் மட்டுமல்லாமல், வருடத்தின் எல்லா நாட்களிலும் சுற்றுலா பயணிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளார்கள். கொடைக்கானலில் விண்மீன் வடிவத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஏரி, பியர் ஷோலா என்ற உயரமான நீர்வீழ்ச்சி, தற்கொலைமுனை என்று அழைக்கப்படுகின்ற 5000 அடி ஆழமான பள்ளத்தாக்கு, 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் அரிய குறிஞ்சி மலர்கள் நிறைந்த பகுதியில் இருக்கும்குறிஞ்சி ஆண்டவர் கோயில், தூண்பாறை, காட்டிற்குள் அமைந்துள்ள பேரிஜம் ஏரி, 8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பைசன் வெல்ஸ், கி.மு. 5000 ஆண்டுக்கு முன் வாழ்ந்த ஆதி மனிதனின் வாழ்க்கைக்கு நம்மை

இழுத்துச் செல்லும் டால்மென் சர்க்கிள் போன்ற இன்னும் பல இடங்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகின்றன.

அதைப்போல, உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விப்பதற்காக ஆண்டுதோறும் மே மாதத்தில் இந்த பிரையன்ட் பூங்காவில் மலர்க்கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த வருடம் பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவகையான மலர்களையும் சேர்த்து சுமார் 25 ஆயிரம் மலர்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ஆண்டுக்கு ஆண்டு பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்று உபசரித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தர வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழ்நாடு அரசுக்கு இருப்பதால்தான், இந்த கொடைக்கானலை உள்ளடக்கிய திண்டுக்கல் மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை கொடுத்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் திண்டுக்கல் மாவட்டத்திற்கு நல்லபல நலத்திட்டப் பணிகளை செய்துவருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். அந்த வகையில், 8.3.2017 அன்று 103 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவிலான 1644 பணிகளை காணொலிக் காட்சி மூலம் துவக்கி வைத்தேன்.

31.12.2017 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் 681 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பிலான 115 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. அன்றைய தினமே 187 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பிலான 105 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில் 24 ஆயிரத்து 521 பயனாளிகளுக்கு 63 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நான் இங்கு வந்து இந்த மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்துவிட்டு உங்களிடையே கொடைக்கானலின் பெருமைகளை பேசிவிட்டு போவது மட்டும் என்னுடைய பணி அல்ல. இங்கே வரும் சுற்றுலா பயணிகளுக்கு மேலும் என்னென்ன தேவை என்பதையெல்லாம் அறிந்து அவற்றிற்கான திட்டங்களை வகுப்பதும், அதனை தொடர்ந்து செயல்படுத்துவதும் என் தலையாய கடமையாக நான் கருதுகிறேன்.

இன்று கூட கொடைக்கானலில்
10 ஏக்கரில் 10 கோடி ரூபாய் செலவில்
புதியதாக அமைக்கப்பட்டுள்ள
ரோஜா தோட்டம் மற்றும் கொய் மலர்கள்
செயல்முறை மாதிரி பண்ணை ஆகியவற்றை
நான் திறந்து வைத்துள்ளேன்.

இதில் 1500க்கும் மேற்பட்ட ரோஜா ரகங்கள் பெறப்பட்டு 15 ஆயிரம் ரோஜா செடிகள்

நடவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் அமர்ந்து இளைப்பாற
‘‘ஆம்ப்ஃபி தியேட்டர்’’ (Amphi Theatre)
அமைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது.

இயற்கையாக அமைந்துள்ள இதன் நில அமைப்பும்
அதில் நடவு செய்யப்பட்டுள்ள ரோஜா செடிகள் மற்றும் புல்தரைகள் தமிழ்நாடு
மட்டுமல்லாமல்,
இந்திய அளவில் வியப்பாக பேசும் அளவிற்கு
அமையும் என்பதில் ஐயமில்லை.

பிரையன்ட்  பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கென
6 கோடியே 80 லட்சம்  ரூபாய் மதிப்பீட்டில்

தகவல் தொடர்பு மையம், தோட்டக்கலைத் துறை அலுவலகங்கள்,
கழிவறை வசதி உள்ளிட்ட சீரமைப்பு பணிகளும்,
புதிய கழிவறை, சுற்றுச்சுவர் மறுசீரமைப்பு,
உணவுக்கூடம், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

மேலும், பிரையன்ட் பூங்காவில் நடப்பு நிதியாண்டில்
ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா மேம்படுத்துதல்,  கண்காணிப்பு கேமரா
அமைத்தல், வாகன நிறுத்துமிடம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கொடைக்கானல் நகராட்சி பகுதியில்
சுற்றுலா பயணிகள் வசதிக்காக  மின்னணு
கழிவறைகள் (e-toilet) ஏற்படுத்தி அவை
பயன்பாட்டில் உள்ளன.
கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர்
பிரச்சனைக்கு தீர்வு காண,  கீழ்க்குண்டாறு குடிநீர்
அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ்
உரக்கிடங்கு அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்பட்டு
வருகிறது.  இவை தவிர, கொடைக்கானல் நகராட்சியில் அடிப்படை கட்டமைப்புகளை
மேம்படுத்திட , பேவர் பிளாக் சாலை , தார்ச்சாலை மற்றும் பைப் லைன் அமைத்தல்
உள்ளிட்ட பணிகளும்  நடைபெற்று வருகின்றன.

கொடைக்கானல் நகராட்சியில் பணிபுரியும்  துப்புரவு பணியாளர்களின் நலன் கருதி  அடுக்குமாடி குடியிருப்புகள், நவீன எரிவாயு தகன மேடை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கொடைக்கானல் நட்சத்திர ஏரியை சுற்றிலும் உள்ள ஏரிச்சாலை , பாரிக்கவை–கூக்கால் சாலை , பூலத்தூர், வடகவுஞ்சி, பண்ணைக்காடு, மங்களங்கொம்பு, பள்ளங்கி சாலை புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கொடைக்கானல்–பழனி சாலையில் 7 இடங்களில் தடுப்பு சுவர் அமைத்தல் , கொடைக்கானலில் பிரதான சாலையான கொடைக்கானல் மலைச்சாலை , பூலத்தூர் , போலூர், வத்தலக்குண்டு ,தாண்டிக்குடி ஆகிய சாலைகளில் சீரமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. வத்தலக்குண்டு– தாண்டிக்குடி சாலையில் தடுப்பு சுவர் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. கோசன் – கிளாவரை சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகில் போக்குவரத்துத்துறைக்கு சொந்தமான இடத்தில், பலநிலை வாகன நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பயண நேரத்தையும், போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும்விதமாக, கொடைக்கானலுக்கு மாற்றுப் பாதையாக பெரியகுளம் முதல் பெருமாபள்ளம் வரை அடுக்கம் வழியாக 36 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழைய சாலையினை புதுப்பித்து அகலப்படுத்த 2015–16ஆம் ஆண்டு ஆணைகள் வெளியிட்டார்கள். அதன்படி, ரூபாய் 70 ரூபாய் ஒதுக்கப்பட்டு 29 கிலோ மீட்டர் பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 7 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கொடைக்கானல் மலைச்சாலையில் அடிக்கடி மழைக்காலங்களில் ஏற்படும் சாலை அரிப்புகளையும், நிலச்சரிவுகளையும், சாலை சேதங்களையும் தடுக்கும்பொருட்டு, சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள 7.5.2018 அன்று ரூபாய் 44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் தொடங்கப்படும்.

திண்டுக்கல் முதல் நத்தம் வரை 38 கிலோ மீட்டர் நீள சாலையினை ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் இருவழிச்சாலையாக அமைக்கவும் மற்றும் தைப்பூச பக்தர்களுக்கு தனியாக நடைபாதை அமைக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். விரைவில் இப்பணி துவங்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல தாராபுரம் பழநி சாலையினை அகலப்படுத்தி தைப்பூசம் மற்றும் உத்திரம் ஆகிய திருவிழாக் காலங்களிலே பக்தர்கள் தங்குதடையில்லாமல், எந்த விபத்தும் இல்லாமல் பயணம் செய்ய சாலையின் இருபுறங்களிலும் அந்த பக்தர்களுக்காக தனிப் பாதை அமைத்துக் கொடுக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒருநாடு செல்வ செழிப்போடு இருக்கிறது என்பதை
அந்த நாட்டின் பூமிக்கு அடியில் இருக்கின்ற
கனிம வளங்களை கொண்டு தீர்மானிக்கிறோம்.
ஒருநாடு அழகாக இருக்கிறது என்பதை
அந்த நாட்டின் பூமிக்கு மேலே இருக்கின்ற
இயற்கை வளங்களைக் கொண்டுதான் தீர்மானிக்கிறோம். இந்தியாவில், குறிப்பாக
தமிழ்நாடு அழகு நிறைந்த மாநிலமாக திகழ்வதற்கு,
இங்கே நமது பாரம்பரியத்தையும் பழமையையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற
நீண்ட நெடிய பசுமையான வயல்வெளிகள்,
அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் உணவு வகைகள், காவிரி, தென்பெண்ணை, பாலாறு,
வைகை, தாமிரபரணி போன்ற ஆறுகள்,
அடர்ந்த வனப்பகுதிகள், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப்
பிரதேசங்கள், கடல் பரப்புகள் ஆகியவைதான்.

நம் நாட்டிற்கு அழகையும், அழகுடன் சேர்த்து செல்வத்தையும் கொடுக்கின்ற அத்தகைய
இயற்கை வளங்களைக் காப்பது என்பது இந்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு
தனிமனிதனின் கடமையாகும்.
எத்தனை அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டாலும்,

இத்தகைய கடலையும், மலைகளையும், காடுகளையும் மனிதர்களால் உருவாக்க முடியாது.
ஆனால், அந்த அறிவியலைக் கொண்டு
இயற்கையை பாதுகாக்கவும்,
சிறந்த முறையில் பராமரிக்கவும் முடியும்.
மக்களை பாதுகாத்து வருகின்ற
இந்த இயற்கையை அழிக்காமல், சிதைக்காமல், பாதுகாப்பதுதான் அந்த இயற்கைக்கு நாம் செலுத்தும் நன்றியாக கருத வேண்டும்.
ஒரு மனிதன் தன் வாழ்நாளில் குறைந்தபட்சம்
ஒரு மரக்கன்றையாவது நட்டு,
அதனை வளர்த்து பாதுகாப்பதை தனது வாழ்நாள் குறிக்கோளாக கொள்ள வேண்டும்.

இயற்கையிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமாக இருக்கிறது.
எந்த இயற்கையும் தனக்காக வாழ்வதில்லை.
மரம் தனக்காக காய்ப்பதும் இல்லை, பழுப்பதுமில்லை. தேனீக்கள் தனக்காக மட்டும் தேனை சேமித்து வைப்பதில்லை.
பூஞ்செடிகள் தனக்காக மலர்வதில்லை.
எல்லாப் பயன்களையும் மனிதர்கள்தான் அனுபவிக்கிறார்கள்.

அத்தகைய இயற்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவை வாழ்வதற்கும், வளர்வதற்கும் அதிக இடங்களைக் கொடுத்து, நம்மைச் சுற்றி இயற்கைச் சூழலை உருவாக்கிக் கொண்டால், அந்த இடம் அழகாகவும், அமைதியாகவும் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
இத்தகைய சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கமாக கொண்டுதான் இப்படிப்பட்ட மலர்க் கண்காட்சிகள் அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.
இந்த இனிய வேளையில்

**“இயற்கைக்கு தோழனாக இருப்போம்!**
**இயற்கைக்கு அரணாக இருப்போம்!”** என்ற
உறுதிமொழியை எடுத்துக் கொள்வோம்.

இங்கே வண்ணமயமாக அழகாக,

அணிவகுத்து நிற்கின்ற

இந்த மலர்களையெல்லாம் பார்க்கின்றபோது,

மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்ப்பதுபோல் இருக்கிறது. இனம், மதம், மொழி, நாடு, காலம் அனைத்தையும் கடந்து ஜீவராசிகள் அனைத்துக்கும் பொதுவான இயற்கையின் அடையாளம்தான் மலர்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அனைத்து ஜீவராசிகள்மீதும் பற்றும் பாசமும் கொண்ட

அன்பின் அடையாளமாக திகழ்ந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனக்காக பூக்காத பூக்களைப் போல

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

தனக்காக வாழாதவர்கள், மக்களுக்காக வாழ்ந்தவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, இயற்கைக்குத் தோழனாகவும், இயற்கைக்கு அரணாகவும் திகழ்ந்து வருகிறது.

தான், தமக்கு என்று சுயநலத்தோடு வாழ்ந்து வருபவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்தி வருவதோடு, ‘தமிழ்நாட்டை கைப்பற்றலாம்’ என்று பகல் கனவு காண்கிறார்கள்.

தொண்டர்களை ஏமாற்றுவதற்கு என்னென்ன நாடகம் நடத்த முடியுமோ, அனைத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் நாடகத்தை நாடகமாகத்தான்

மக்கள் ரசிக்கிறார்கள். இதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்கு புரியும்.

மன்னர்கள் காலத்தில்

ஒரு ஊரில் உள்ள பஞ்சாயத்தாரிடம்

ஒரு வழக்கு வருகிறது.

ஒருவன் சொல்கின்றான்.

’ஐயா, நான் இவரிடம் நிலம் வாங்கினேன்..

வாங்கி அதை உழும்பொழுது

ஒரு பானையில் புதையல் இருந்தது.

நான் நிலத்தைத்தான் வாங்கினேன்.

புதையலை வாங்கவில்லை.

அதனால் இந்தப் புதையல்

அவருக்குத்தான் சேர வேண்டும்' என்றான்.

ஆனால், நிலத்தை விற்றவனோ, 'அதெப்படி, அந்தப் புதையல் எனக்குச் சொந்தமாகும் ?

நான்தான் நிலத்தை விற்றுவிட்டேனே!' என்கிறான்.

பஞ்சாயத்தாரும் அந்த ஊர் மக்களும்

இந்த வழக்கைக் கேட்டு திகைத்துப் போகிறார்கள்.

தீர்ப்பு சொல்லமுடியாமல் பஞ்சாயத்தார் வழக்கை

அடுத்த வாரத்திற்கு ஒத்திப் போடுகிறார்கள்.

அந்த இடைப்பட்ட ஒருவாரம்

ஊர்முழுவதும் இந்த வழக்கைப் பற்றியும்

இப்படிப்பட்ட நல்லவர்கள் இந்தக்காலத்திலும் இருக்கிறார்களே! என்றும்

மக்கள் ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மறுவாரம் வழக்கு விசாரணைக்கு திரும்பவும் வருகிறது.

அவர்கள் இருவரும் சண்டையிட்டபடியே

பஞ்சாயத்துக்கு வருகிறார்கள்.

பஞ்சாயத்தார் விசாரித்தார்.

நிலத்தை விற்றவன், 'நான் நிலத்தை விற்றாலும்

புதையல் என்னுடையதுதான்' என்கிறான்.

நிலத்தை வாங்கியவன்,

'அதெப்படி, நான் வாங்கி விட்டேனே!

அதனால் அதில் இருப்பது அனைத்தும் என்னுடையதுதான்' என்கிறான்.

பஞ்சாயத்தார் உட்பட மக்களும் வியப்பில் மூழ்கிவிடுகிறார்கள்.

போனவாரம் வேறுமாதிரியாக பேசியவர்கள்,

இந்த வாரம் மாற்றிப் பேசுகிறார்கள்.

இந்த ஒரு வாரத்தில் என்ன நடந்தது என்று யோசித்தனர். அப்போது பஞ்சாயத்திலிருந்த ஒரு பொற்கொல்லர் எழுந்து,

''அய்யா அது வேறு ஒன்றும் இல்லை,
போனவாரம் இந்தப் புதையலை சோதித்தவன்,
உள்ளே இருப்பது செப்புக் காசுகள்'' என்று கூறினான்.

''செப்புக் காசுகளால் பிரயோஜனம் இல்லை என்பதால்
தங்களை அவர்கள் நல்லவர்களாக
காட்டிக் கொண்டார்கள்.
நேற்று நான் திரும்பவும் அந்த புதையலை சோதித்து
அந்த புதையல் முழுவதும் பொற்காசுகள் இருப்பதாக உறுதியாக கூறினேன். அதன் விளைவுதான் இப்போது அவர்கள் இருவரும் தங்கள் உண்மை முகத்தை காட்டியிருக்கிறார்கள்'' என்றார்.

கடைசியாக பஞ்சாயத்தார்,
''உழைக்காமல் கிடைத்த இந்த புதையல்,
உங்கள் இருவருக்கும் சொந்தமில்லை.
கடினமாக உழைக்கும் இந்த ஊர் மக்களுக்குத்தான் இந்தப் புதையல் சொந்தம்,
அதை மக்களுக்குக் கொடுத்து விடுவோம்''
என்று தீர்ப்பு சொன்னார்கள்.

கட்சிக்கும், ஆட்சிக்கும் உழைப்பவர்கள் பக்கம்தான் மக்கள் நிற்பார்கள். அவர்களின் ஆதரவும் கிடைக்கும். புதையல் போன்ற மக்கள் ஆதரவு உழைக்காதவர்களுக்கு என்றும் கிடைக்காது என்று கூறி,

இந்த மலர்க் கண்காட்சி விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு
எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு முன்னாலே மாண்புமிகு வனத்துறை அமைச்சர்அவர்கள் அழகாக, தெளிவாக பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுதும் சரி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகும் அம்மாவினுடைய அரசு இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் வழங்கியது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டதென்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியாவிலேயே பல்லாயிரக்கணக்கான காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் காவல் நிலையங்கள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, இந்தியாவிலேயே பரிசு கொடுக்கின்ற ஒரு திட்டத்தை வகுத்தார்கள். அந்தத் திட்டத்திலே நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற காவல் நிலையத்தையும் ஆய்வு செய்தார்கள். அப்பொழுது ஆய்வு செய்கின்றபொழுது இன்றைக்கு தமிழகத்திலுள்ள கோவை ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் முதன்மைக் காவல் நிலையம் என்று இந்தியாவிலேயே சிறப்புப் பரிசை பெற்றது. அதேபோல, அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாவது பரிசை பெற்றது. ஆகவே, இன்றைக்கு காவலர்கள் சிறந்த முறையிலே பணியாற்றிய காரணத்தினால், இந்தியாவில் இருக்கின்ற காவல் நிலையங்களிலே சிறந்த காவல் நிலையம் தமிழ்நாட்டில் இருக்கின்ற கோவையில் இருக்கின்ற ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம்தான் சிறந்த காவல் நிலையம் என்று பரிசை பெற்றிருக்கின்றது. அதேபோல், இந்தியாவிலேயே ஐந்தாவது காவல்நிலையமாக சென்னை அண்ணா நகர் காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டது. ஆகவே, சட்டம், ஒழுங்கு எந்தளவிற்கு பேணிக்காக்கப்படுகிறது, ஆகவே, இன்றைக்கு எந்த இடத்தில் எந்தத் தவறு நடந்தாலும் உடனடியாக காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமிழகத்திலே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஆட்சியாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளை வைத்து இன்றைக்கு திட்டங்களை அம்மாவினுடைய அரசு பெற்றுக்

கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திற்கும் கேபிள் டி.வி நிறுவனத்திற்கு டிஜிடல் ஒளிபரப்பு உரிமம் வழங்கியது கிடையாது. ஆனால், அம்மாவினுடைய அரசு கோரிக்கை வைத்த உடனேயே, மத்திய அரசு டிஜிடல் ஒளிபரப்பு உரிமையை தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த டிஜிடல் ஒளிபரப்பு உரிமம் பெற்ற காரணத்தினாலே, குறைந்த கட்டணத்திலே அதிக சேனல்கள் இன்றைக்கு மக்கள் பார்க்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் பயன்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தாட்கோ மூலமாக இன்றைக்கு இளைஞர்களுக்கு கடனுதவி வழங்கி, அவர்கள் கடன் பெறுவதற்கு புதிய திட்டங்கள் மூலமாக, அந்த தொழில் துவங்குவதற்காக இன்றைக்கு ரூபாய் 234 கோடி சுயதொழில் தொடங்குவதற்காக, அம்மாவினுடைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

அதேபோல, விவசாயிகள் உரிய காலத்திலே பயிரிடல் செய்வதற்காக பயிர்க்கடன் இன்றைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்றது. 9,84,909 விவசாயிகளுக்கு ரூபாய் 5813 கோடி பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. ஆகவே, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு வேளாண்மைத் துறையிலே சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக இன்றைக்கு குறிப்பிட்ட காலத்திலே பயிர் செய்ய வேண்டுமென்பதற்காக, விவசாயிகளுக்கு உரிய காலத்திலே கடன் வழங்கி, அந்த விவசாயிகள் உரிய காலத்திலே பயிர் செய்து, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் அதிக விளைச்சல் பெறுவதற்கு இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் பயிர்க் கடன் உரிய காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்திலே கடந்த வருடம் 140 ஆண்டு காலம் இல்லா வறட்சி. இந்த வறட்சியினால் விவசாயிகள் பயிரிட்ட அந்த பயிர்கள் எல்லாம் கருகி விட்டது. விவசாயிகள் கவலையடைந்தார்கள், விவசாயிகள் நஷ்டமடைந்தார்கள். கோரிக்கை வைத்தார்கள், எங்கள் பயிர்கள் எல்லாம் காய்ந்துவிட்டது, கருகிவிட்டது, ஆகவே எங்களுக்கு அந்த வறட்சி நிவாரணம் கிடைக்க வேண்டும் அந்த கோரிக்கை வைத்தார்கள், அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே அம்மாவினுடைய அரசு ரூபாய்

2247 கோடி வறட்சி நிவாரணமாக விவசாயிகளுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, இன்றைக்கு பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக இந்திய அளவிலேயே தமிழகம்தான் அதிக பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக ரூபாய் 3265 கோடியை விவசாயிகளுக்கு பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. இன்னும் பல விவசாயிகளுக்கு இந்த காப்பீடு திட்டத்தின் மூலமாக இந்த நிதியை பெற்றுத் தருவதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் பெருமக்கள் திண்டுக்கல் மாவட்டதில்கூட அதிகமாக தென்னை மரங்கள் பயிரிட்டிருக்கிறார்கள். ஆகவே, தென்னை மரம் பயிரிட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு போதிய வருமானம் இல்லையென்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, தமிழகம் முழுவதுமுள்ள தென்னை மரங்கள் சாகுபடி செய்துள்ள வேளாண் பெருமக்கள் அதிக வருமானம் பெறவேண்டுமென்பதற்காக நீரா பானம் உற்பத்தி செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள், அந்த அனுமதியையும் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பெய்கின்ற மழை நீர், எங்கு பெய்தாலும் சரி, அது வீணாகாமல், ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக 1158 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 136 கோடியிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல, இன்றைக்கு மழைநீர், பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாக கடலிலே கலக்கப்படுகின்றன. அப்படி வீணாகக் கடலிலே கலக்கப்படுகின்ற அந்த நீர் ஆங்காங்கே இருக்கின்ற ஓடைகள், நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, அந்த தடுப்பணைகள் கட்டப்படுவதின் மூலமாக பெய்கின்ற மழைநீர் அங்கே தேக்கி வைக்கப்படுகின்றது. அந்த தேக்கி வைக்கப்பட்ட நீர், நிலத்தடி நீர் உயர்கின்றது, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கின்றது, அந்தத் திட்டத்திற்காக அம்மாவினுடைய அரசால், மூன்றாண்டு கால திட்டமாக ரூபாய் 1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது,

அதற்கு முதற்கட்டமாக, ரூபாய் 350 கோடி நிதி ஒதுக்கீடு தடுப்பணைகள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

அதேபோல, கூட்டுப்பண்ணை திட்டத்தின் வாயிலாக இன்றைக்கு விவசாய குடிமக்களே ஒருங்கிணைந்து அந்தத் திட்டத்தின் வாயிலாக அவர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக அந்த கூட்டுப் பண்ணை திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு தான் இன்றைக்கு வழங்கியிருக்கின்றது.

அதேபோல, வறட்சி காலங்களிலே, இன்றைக்கு பார்த்தீர்களானால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பல்வேறு விவசாயிகள் 1000 அடி borewell போட்டாத்தான் தண்ணீர் கிடைக்கும். அந்தத் தண்ணீரை வைத்து விவசாய பெருங்குடிமக்கள் விவசாயம் செய்ய வேண்டும். அந்த 1000 அடியிலிருந்து வருகின்ற நீர் குறைந்த அளவாகத்தான் இருக்கின்றது. அந்த குறைந்த அளவு நீரை வேளாண் பெருமக்கள் அதை சரியான முறையிலே பயன்படுத்த வேண்டுமென்பதற்காக சொட்டு நீர் பாசனத் திட்டத்தை இன்றைக்கு உருவாக்கி, 1 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் முழுவதும் மானியம், அதற்குமேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் 75 சதவிகித மானியத்தைக் கொடுத்து, அந்த குறைந்த நீரை வைத்து சிறந்த விவசாயத்தை செய்ய வேண்டுமென்பதற்காக வேளாண் பெருமக்களுக்காக இந்தத் திட்டத்தை உருவாக்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் பெருமக்களுக்கு மானிய விலையிலே இன்றைக்கு வேளாண் கருவிகள் கொடுக்கப்படுகிறது. டிராக்டர், விதைகள், உரம் கொடுக்கிறார்கள். வேளாண் பெருமக்களுக்கு இன்றைக்கு உற்பத்தி செய்வதற்கு ஊக்கமாக செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அதேபோல, இன்றைக்கு சோலார் மின்மோட்டார் நம்முடைய விவசாயிகளுக்கு மானிய விலையிலே கொடுக்கின்றோம். இப்படிப்பட்ட திட்டங்கள் வாயிலாக, இன்றைக்கு எனக்கு முன்னாலே மாவட்ட அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை வாரி, வாரி வழங்கியதன் விளைவாக விவசாயம் வளர்ந்திருக்கிறது, இன்றைக்கு வேளாண்

பெருமக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்த காரணத்தினாலே, இந்தியாவிலேயே உணவு தானிய உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்காக தொடர்ந்து கிருஷி கர்மாண் என்ற உயர்ந்த விருதை மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஒவ்வொரு ஆண்டும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த தினம் வருகின்றபொழுது, மரக்கன்று நடுகின்றோம். ஏனென்றால் மரம் வளர்ப்பது நம்முடைய கடமை. இயற்கை வளம் இருந்தால் தான் மழை பொழியும், மழை பொழிந்தால்தான் நீர் கிடைக்கும், நீர் கிடைத்தால்தான் வேளாண் பெருமக்கள் சிறந்த விவசாயம் மேற்கொள்வார்கள், குடிநீருக்குத் தேவையான நீர் கிடைக்கும். ஆகவே, அப்படிப்பட்ட இயற்கை வளங்களை மேலும் செம்மைப்படுத்த அம்மாவினுடைய அரசு ஒவ்வொரு ஆண்டும் அம்மாவினுடைய பிறந்த நாள் வருகின்றபொழுது, அம்மாவினுடைய பிறந்த நாள் விழாவை நினைவு கூருகின்ற வகையிலே, இந்த ஆண்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டது. அதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே வந்து நேரடியாக இந்த மரக்கன்று நடவு விழாவை நடவு செய்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு இன்றைக்கு மானிய விலையிலே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

அதேபோல, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் ரூபாய் 930 கோடி அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கின்றது. இதன் மூலமாக 6,51,000 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள். ஏழை, எளிய மக்களுக்கு உரிய சிகிச்சை தனியார் மருத்துவமனையின் மூலம் கிடைப்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் மூலமாக அம்மாவினுடைய அரசு ரூபாய் 930 கோடி வழங்கியிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாடு, உயர்மட்ட சாலைகள் மற்றும் துறைமுகம் மேம்பாட்டிற்காக சுமார் ரூபாய் 1 லட்சம் கோடி மத்திய அரசிடமிருந்து பெறுவதற்குண்டான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை 30 மாவட்டங்களில் சிறப்பாக கொண்டாடினோம். இதன் மூலமாக 30 மாவட்ட மக்களையும் நான் நேரில் சந்தித்தேன். அப்பொழுது, ரூபாய் 5712.90 கோடி மதிப்பீட்டில் 3200 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டினேன். அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை முன்னிட்டு 10 ஆண்டு நிரம்பிய சிறைவாசிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பையும் கொடுத்திருக்கின்றேன். விரைவிலே, 10 ஆண்டுகள் நிறைவு பெற்ற சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, 61 நிறுவனங்கள் ரூபாய் 62,738 கோடி மதிப்பீட்டிலே 96340 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி தந்திருக்கின்றோம். கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இருக்கின்றபொழுது, விபத்து ஏற்பட்டு இறந்தால் ரூபாய் 5 இலட்சம் அம்மாவினுடைய அரசு தருகின்றது.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாக வெளியிட்டார்கள், வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித்தொகை இருமடங்காக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அதன் மூலமாக 57,762 நபர்கள் பயன்பெற்றார்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 14 கோடியே 86 இலட்சம்.

அதேபோல, இன்றைக்கு எனக்கு முன்னாலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழகாகச் சொன்னார்கள். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 65 சதவிகிதம் வேளாண் பணிகளை மேற்கொள்கின்றோம். ஆகவே, நம்முடைய தமிழகம் வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஒரு மாநிலமாக இருக்கின்ற காரணத்தினாலே, வேளாண் பெருமக்களுக்கு பயன்பெற வேண்டுமென்பதற்காக, அந்த வேளாண் பெருமக்கள் பல ஆண்டுகாலமாக வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றும்விதமாக, ஆங்காங்கே இருக்கின்ற, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக்கொள்ளலாம் என்ற உத்தரவை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இதன்மூலமாக ஆங்காங்கே

இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள், அந்த ஏரிகளில் இருக்கின்ற, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி தங்கள் நிலங்களுக்கு இயற்கை எருவாகப் பயன்படுத்தினார்கள். இதன் மூலமாக இன்றைக்கு வேளாண் உற்பத்தி அதிகமாக விளைந்திருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, அரசின் சார்பாக, முன்மாதிரியாக 1519 ஏரிகளை எடுத்து, ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, ஆங்காங்கே இருக்கின்ற அந்த ஏரிகள், குளங்களை ஆழப்படுத்துவதன் மூலமாக பெய்கின்ற மழைநீர் முழுவதும் அங்கே சேமிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக குடிமராமத்து என்ற ஒரு திட்டத்தை உருவாக்கினோம். அந்தத் திட்டம் முழுவதும் அந்தந்த பாசன விவசாயிகள் சங்கமே மேற்கொள்ள வேண்டும், அதற்கான நிதியை அவர்களிடத்லே கொடுத்து அதை அவர்களை செய்யச் சொன்னோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, விவசாய பெருங்குடி மக்கள் மேலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று மேலும் 1519 ஏரிகள், அந்த ஏரிகளுக்கு தேவையான முழு நிதியையும் அம்மாவினுடைய அரசே தருகின்றது. அந்த ஏரிகளை ஆழப்படுத்துதல், கரையை பலப்படுத்துதல், வருகின்ற கால்வாய், வரத்துக் கால்வாயினுடைய அந்த தூர்வாருதல், அதேபோல, உபரி நீரை வெளியேற்றுதல், மதகை சரி செய்தல் போன்ற திட்டங்களை அந்த விவசாயிகளே செய்ய வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு பாசன விவசாயிகள் சங்கத்திற்கு அந்த ஏரிக்கு எவ்வளவு நிதி தேவையோ அத்தனை நிதியும், முழுவதையும் அம்மாவினுடைய அரசு வழங்கியது. அந்த ஏரி தூர்வாருகின்றபொழுது, அந்த ஏரியை பலப்படுத்துகின்றபொழுது, மதகை சரிசெய்கின்றபொழுது, அந்தக் கால்வாயில் வருகின்ற நீர், அதை முறையாக வருவதற்கு தூர்வாருகின்ற நிலையை உருவாக்குவதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 325 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, முழுக்க, முழுக்க விவசாய பிரதிநிதிகளை வைத்து செயல்படுகின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, 40,000 சூரிய மின்சக்தியுடம் கூடிய 840 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதேபோல், தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்ததையொட்டி, அரசு சார்பில் தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக கொண்டாடப்படவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

கல்வியிலே ஒரு புரட்சி. எல்லா துறைகளை காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்ற துறை கல்வித்துறை. ஒரு மாநிலத்திலே கல்வி வளர்ந்தால் அனைத்தும் வளரும். பொருளாதாரம் வளரும். எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும் என்றால் கல்வி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். கல்வி கொடுப்பதற்காக அம்மாவுடைய அரசு அதிக நிதியை இந்த துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சி காலத்தில் இருந்து இன்று வரை 116 ஆரம்ப பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 829 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஆங்காங்கே கிராமத்திலே வாழ்கின்ற மக்கள், நகரத்திலே வாழ்கின்ற மக்கள் தங்கள் பகுதிகளிலேயே பள்ளிகளை தரம் உயர்த்துகின்ற போது அந்தப் பள்ளியிலே பள்ளி குழந்தைகளை சேர்ப்பதால் சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது. பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதன் விளைவு தொடக்கப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 99.85 சதவிகிதமாகவும், நடுநிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 99.11 சதவிகிதமாகவும், உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 93.15 சதவிகிதமாகவும், மேல்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 77.64 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. இது எல்லாம் அம்மாவுடைய ஆட்சியிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய நடுத்தர மக்களின் குழந்தைகளும் உயர்கல்வி படிக்க வேண்டும். தனியார் பள்ளியிலே போய் சேர்ந்தால் பல்லாயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து தான் உயர்கல்வி படிக்க கூடிய நிலை இருக்கிறது. திறமையான அறிவுபூர்வமான மாணவர்களாக இருப்பார்கள், பொருளாதார சூழ்நிலை காரணமாக பல்லாயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து உயர்கல்வி படிக்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே, அப்படிப்பட்ட மாணவர்கள் குறைந்த கட்டணத்திலே படிப்பதற்காக இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்திலிருந்து இன்று வரை 76 அரசு மற்றும் கலை கல்லூரிகள் திறந்து, இன்றைக்கு உயர்கல்வி படிக்கின்ற சூழ்நிலையை அம்மாவுடைய அரசு உருவாக்கி தந்திருக்கிறது.

ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள், கிராமத்திலே வாழ்கின்ற விவசாயி, தொழிலாளிகளுடைய குழந்தைகள் இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கிறோம். இந்த திட்டத்தின் வாயிலாக இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை தமிழகத்திலே 46.94 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

2011ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே அமர்கின்ற போது 100–க்கு 21 பேர் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வியில் ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தியதன் விளைவாக, பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டதன் விளைவாக, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கியதன் மூலமாக, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, வேளாண்மை கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகள் அரசின் மூலமாக உருவாக்கியதன் விளைவாக ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ மாணவிகள் இன்றைக்கு உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இன்றைக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கின்றது. இப்படி கல்வியிலே ஒரு சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, இந்திய அளவிலே மருத்துவத் துறையிலே சிறந்து விளங்குகின்றோம். 2011–லிருந்து இன்று வரை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 254 சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு தகுந்த சிகிச்சை அங்கேயே கொடுக்க வேண்டும் என்பதற்காக 254 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்திருக்கின்றோம். அதேபோல, ஏற்கனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக 153 தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதன்மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்கள் அந்த பகுதியிலே உரிய சிகிச்சை மேற்கொள்வதற்காக இன்றைக்கு அம்மாவுடைய அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவி இருக்கின்றது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசு மருத்துவமனைகள் 65. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் 6 அம்மாவின் அரசிலே. மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை, இந்தியாவிலேயே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக முதல் பரிசை பெற்றுக் கொண்டு இருக்கின்றோம். இந்திய அளவிலே இன்றைக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியை சேர்ந்த ஒரு தொழிலாளிக்கு இரண்டு கைகளும் கிடையாது. அந்த இரண்டு கையும் இழந்த அந்த ஏழை தொழிலாளிக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளும் எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு இரண்டு மாதம் ஆகிறது. நலமுடன் இருக்கின்றார். ஆகவே, மருத்துவத்துறையிலே எந்த அளவிற்கு அம்மாவுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்காக சிறப்பாக சேவை செய்த அரசு மருத்துவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகின்றேன். இந்திய அளவிலேயே அரசு மருத்துவமனையில் இரண்டு கைகள் பொருத்தப்பட்ட வரலாறு கிடையாது. அந்த வரலாற்றை படைத்த அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல, இதய மாற்று அறுவை சிகிச்சை 110 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. சிறுநீரகம் 318 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. கல்லீரல் 161 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. நுரையீரல் 102 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது.

கணையம் 7 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. இதுதவிர 356 வட்டங்களில் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு கொண்டு இருக்கிறது. நடமாடும் மருத்துவமனை மூலமாக ஆங்காங்கே கிராமத்திலே இருக்கின்ற மக்கள், நடமாடும் மருத்துவமனையிலே தங்கள் உடலை பரிசோதித்து தங்கள் உடலிலே என்ன நோய் இருக்கிறது என்பதை கண்டறிந்து அந்த நோயை குணப்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலே முன்னிலை மாநிலமாக விளங்கி கொண்டு இருக்கிறது. 156 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5933 முக்கிய உறுப்புகள் தானமாக பெறப்பட்டு தொடர்ந்து அகில இந்திய அளவில் மூன்றாவது முறையாக தமிழகம் உடல் தானத்திலே முதல் மாநிலமாக அதற்கான பரிசையும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படி ஏராளமான திட்டங்களை அம்மாவுடைய அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

காவிரி நதிநீர் பிரச்சினை குறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அழகாக குறிப்பிட்டார்கள். காவிரி நதிநீர் என்பது ஒரு ஜீவநதி. இன்றைக்கு காவிரி நதிநீரிலிருந்து தான் 20 மாவட்டங்கள் குடிநீர் ஆதாரங்களை பெறுகின்றன. காவிரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986ஆம் ஆண்டு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் கோரிக்கை வைத்தார்கள். மத்திய அரசு நடுவர் மன்றம் அமைக்க ஒரு இடைக்கால தீர்ப்பு வழங்கியது. 205 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என்று நடுவர் மன்ற ஆணையமும் ஆணையிட்டது. இறுதி தீர்ப்பை 2007ல் வழங்கியது. நடுவர் மன்ற ஆணையம் வழங்கிய தீர்ப்பை மத்திய அரசு கிடப்பில் போட்டது. அரசிதழில் வெளியிட காலம் தாழ்த்தியது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, உச்சநீதிமன்றம் 2013ல் தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பிலே மத்திய அரசு உடனடியாக நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டது. அதன்

வாயிலாக, மத்திய அரசு நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது. நடுவர் மன்ற ஆணை வழங்கிய தீர்ப்பின்படி 192 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தினார் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காததால், மாண்புமிகு அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்த வழக்கை அம்மாவின் அரசு திறமையாக அனைத்து ஆதாரங்களுடன் திறமையான மூத்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடியதன் விளைவாக இன்றைக்கு நல்ல வாதங்களை எடுத்து வைத்து உச்சநீதிமன்றத்திலே நேற்றைய தினம் 32 ஆண்டுகாலம் நடந்து வந்த காவிரி நதிநீர் பிரச்சினை தீர்வு காண்கின்ற வகையில் உச்சநீதிமன்றத்திலிருந்து நல்ல தீர்ப்பை தமிழ்நாடு அரசு பெற்று தந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் மெரினா கடற்கரை எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் தொடர்ந்து 80 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். யார் யாரோ பேசுகிறார்கள். விவசாயிகளுக்காக நன்மை செய்தோம் என்று. ஆனால் நன்மை செய்த ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். சட்டத்தின் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை பெறுவதில் சட்டப் போராட்டம் நடத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நீரை பெற்று தருவதற்காக தனது இறுதி மூச்சு வரை போராடினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து அறவழியில் போராடி வெற்றி பெற்று தந்துள்ளது என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி நதிநீர் பெறுவதற்கு மற்ற கட்சிகளை விட அதிக அக்கறை எடுத்துக் கொண்ட கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முடிவின்படி, அம்மாவின் அரசு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தின் மூலம் நேற்றைய தினம் பெற்றுத் தந்துள்ளது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு

கிடைப்பதற்கு பாடுபட்ட இதயதெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி சொல்வோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த பூமியிலிருந்து மறைந்தாலும், அம்மா அவர்கள் செய்த சாதனைகள் மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். அதுதான் தலைவர்களுக்கு கிடைக்கின்ற பெருமை. அந்த பெருமைக்குரியவர் புரட்சித் தலைவி அம்மா அம்மா என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

இந்த இயற்கை கொஞ்சும் எழில்மிகு கொடைக்கானலிலே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவிலே சுற்றுலா பயணிகள் வருவதையொட்டி, நம்முடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் இந்த பகுதி அழகுப்படுத்த வேண்டும், நிறைய திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை எல்லாம் அரசு கனிவோடு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுத்து, மலைப் பிரதேசங்களில் இயற்கையான சூழ்நிலையை உருவாக்கி, நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, வெளிமாநிலத்திலே இருக்கின்றவர்களும், வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களும் கண்டுகளித்து மகிழ்கின்ற அளவிற்கு இயற்கை கொஞ்சுகின்ற மலையாக ஏற்காடு, உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப் பிரதேசங்களை அழகுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அம்மாவுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**